முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
HMOP.No.124/2022

Witness PW 1

பெயர்: சிவப்பிரகாஷ்

த/பெ.: சுந்தரமூர்த்தி

இன்று (24/07/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.
சத்தியமாக சொல்கிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எதிர்மனுதாரர் என்னை உருவகேலி செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருமண பெண் பார்த்தபோது என்னை பிடித்துப்போனதாக முதலில் எதிர்மனுதாரர் தான் சொன்னார் என்றால் சரியல்ல, நான் தான் முதலில் சொன்னேன். பெண் பார்த்த காலத்திலிருந்து நிச்சயதார்த்தம் அதன் பிறகு திருமணம் இதற்கு இடைப்பட்ட 4 மாதத்தில் நான் எதிர்மனுதாரரோடு தொலைபேசியில நன்றாகப் பேசிக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரோடு தொலைபேசியில் பேசி வந்ததாக மனுவில் சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னைப் பற்றி நன்றாக தெரிந்து தான் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார் வழக்கிற்காக நான் எதிர்மனுதாரர் உருவகேலி செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு திருமணத்திற்கு செய்த சீர்வரிசைகள் பத்தவில்லை என்று கார் மற்றும் நகைகள் கேட்டு நான் தான் பிரச்சனை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. கார் இல்லை நகை இல்லை என்று நண்பர்கள் கேலி செய்வதாக எதிர்மனுதாரிடம சொல்லி நான் மருத்துவரல்லாத ஆசிரியை மாதிரியான பெண்ணை திருமணம் செய்திருக்க வேண்டும் என்று எதிர்மனுதாரரிடம சொல்லி வந்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனது அம்மாவை பக்கெட்டால் இடித்ததாக இட்டுக்கட்டி சொல்கிறேன் அது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட நிகழ்வு என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் கருவுற்று இருந்தபோது அதனை நான் மகிழ்வாக எடுத்துக்கொள்ளவில்லை மாறாக அந்த சமயத்தில் எதிர்மனுதாரருக்கு கடுமையான வேலை பலுவை கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. முதல் முறையாக கருவுற்று இருந்தபோது அதனை கவனமாக பார்த்துக்கொள்ளாததால் தான் எதிர்மனுதாரருக்கு கரு சிதைவு ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. நகை கார் கிடைக்காததால் எதிர்மனுதாரர் மீது வெறுப்பு கொண்டு சிறு சிறு விஷயங்களைக் கூட பெரிதாக்கினோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மீது உண்மையாகவே எனக்கு வெறுப்பு இல்லாத நிலையில் விவாகரத்து செய்வதற்காக வேண்டியே எதிர்மனுதாரருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சொல்லி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சில நேரங்களில் மது அருந்திவிட்டு எதிர்மனுதாரரிடம ஆபாசமாக திட்டுவதை வழக்கமாக கொண்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மீது வெறுப்பு வரவேண்டும் என்பதற்காக எதிர்மனுதாரா மது அருந்துவதாக நான் மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விவாகரத்து பெறும் நோக்கத்தோடு மனுவில் மிகைப்படுத்தி குற்றச்சாட்டுகள் சொல்லியுள்ளேன் அதில் உண்மை எதுவும இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னோடு வாழ்ந்த கடைசி

நாள் வரை ஒரு நல்ல மனைவியாகத் தான் எனக்கு கடமைகள் செய்து வந்தார் நான் வழக்கிற்காக பொய் காரணங்களை குறிப்பிட்டு மனு தாக்கல செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னோடு வாழ வேண்டும என்பதற்காகத் தான் இதுநாள் வரையும் காத்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல.

x

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.
Sd/A.Tamilselvam,M.L.,
Villupuram
Principal Subordinate Judge ,